

தேனாம்பேட்டை டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டத்தை அமைச்சர் சம்பத் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### டி.எம்.எஸ்.–வண்ணாரப்பேட்டை

# 10 கி.மீட்டர் சுரங்கப்பாதையில் மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம்

## முதல்கட்ட ரெயில் பணிகள் நிறைவு

சென்னை, டிச. 6–

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காகவும் விரைவு பயணத்துக்காகவும் மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது.

கோயம்பேடு – ஆலந் தூர், சின்னமலை – விமான நிலையம் வரை உயர்மட்ட பாதையிலும், திருமங்கலம் – சென்ட்ரல், சைதாப்பேட்டை– டி.எம்.எஸ். வரை சுரங்கப்பாதையிலும் மெட்ரோ ரெயில் சேவை தற்போது நடந்து வருகிறது.

பயணிகள், பொது மக்கள் வரவேற்பை யொட்டி சென்னை மாநகரம் முழுவதும் மெட்ரோ ரெயில் சேவை விரிவுப்படுத்தப்பட்டு வருகிறது.

முதல்கட்டமாக 45 கி.மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெற்றுள்ளன.

### டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டை

தேனாம்பேட்டை டி.எம்.எஸ். – வண்ணாரப்பேட்டை வரையிலான 10 கி.மீட் டர் தூரத்துக்கான சுரங்கப் பாதைகள் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடந்தது.

இந்த வழித்தடத்தில் டி.எம்.எஸ்., ஆயிரம்விளக்கு, எல்.ஐ.சி., ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்ட்ரல், ஐகோர்ட்டு, மண்ணடி வண் ணாரப்பேட்டை உள்ளிட்ட 8 மெட்ரோ ரொயில் நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வழித்தட பாதையில் மின்தடங்கள், சிக்னல் அமைக்கும் பணி நிறைவு பெற் றுள்ளன. இதை யொட்டி டி.எம்.எஸ். – வண்ணார்ப்பேட்டை இடையேயான சுரங்கப்பாதையில் மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

### சோதனை ஓட்டம்

டி.எம்.எஸ். – வண்ணாரப்பேட்டை வழித்தடத்தில் இன்று காலை மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடந்தது. மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் வெற்றிகர மாக நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து விரைவில் ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் ஆய்வு நடத்தி ஒப்புதல் அளித்த பிறகு மெட்ரோ ரெயில் சேவை தொடங்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

### ஜனவரியில் பயணிகள் சேவை

டி.எம்.எஸ். – வண்ணாரப்பேட்டை வழித்தடத்தில் ஜனவரி 2–வது வாரத்தில் பயணிகள் சேவை தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வண்ணாரப்பேட்டை யில் இருந்து விமான நிலையத்துக்கு இனிமேல் 1 மணி நேரத்தில் நேரடியாக எளிதில் பயணிகள் செல்ல முடியும்.

முதல்கட்ட மெட்ரோ ரெயில் 45 கி.மீட்டர் தூர வழித்தட பணிகள் இதன் மூலம் நிறைவு பெற்றுள்ளன.

### அமைச்சர் சம்பத் ஆய்வு

டி.எம்.எஸ். – வண்ணாரப்பேட்டை சுரங்க ரெயில் சோதனை ஓட்ட பணிகளை அமைச்சர் எம்.சி. சம்பத் இன்று காலை ஆய்வு செய் தார். பணிகளை விரைந்து முடித்திட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். அவருடன் மெட்ரோ ரெயில் நிர்வாக இயக்குனர் பங்கஜ்குமார் மற்றும் அதிகாரிகள் உடன் சென்றனர்.